E.A.No. 8/2022 in E.P.No: 34/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.10.12.2024

ம.சா.1 – கண்ணன் க/பெ –ராமமூர்த்தி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனக்கு பூர்வீக ஊர் விருதுநகர், என்.ஜி.ஓ காலனி. நான் பிறந்ததில் இருந்து விருதுநகரில் தான் வசித்து வருகிறேன். மனு சொத்து நான் கிரையம் பெறுவதற்கு முன்பிருந்தே தெரியும் என்றால் சரிதான். மனு சொத்தில் வில்லங்கம் இருப்பதாக சொல்வது எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.373 பிளாட் எண்.12. நான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து 17.06.2020ல் கிரையம் பெற்றேன். நான் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் கிரையம் பெற்ற சொத்தை எனது சகோதரி தங்கம்மாளுக்கு தானமாக கொடுத்துவிட்டேன் என்றால் அதில் கொஞ்சம் கொடுத்துள்ளேன். நான் கிரையம் வாங்கியது 207.32 சதுரமீட்டர். அதில் எனது அக்காவிற்கு 75.887 சதுர மீட்டர் காலியிடத்தை தானமாக கொடுத்துள்ளேன். மீதம் உள்ள இடத்தை எனது உடன் பிறந்த தம்பி பாலமுருகன் என்பவருக்கு தானமாக கொடுத்துள்ளேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு எனக்கு கிரையம் கொடுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து பூர்வீக ஆவணங்கள் சம்மந்தமாக கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.1 ஆவணம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கொடுத்த ஆவணம் அந்த ஆவணம் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது சம்மந்தமாக எனக்கு கொடுத்துள்ளார்கள்.

தாவா நிறைவேற்றுதல் மனுவின் அசல் வழக்கு தீர்ப்புகள் சம்மந்தமாக எனக்கு 2022 ம் ஆண்டில் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக நான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நிறைவேற்றுதல் மனுவில் உள்ள வாதி, பிரதிவாதிகள் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1, 2 ஆவணங்களில் முத்துநாடார் சம்மந்தப்பட்டவர்களாக தான் குறிப்பு உள்ளது. நான் கிரையம் பெரும்போது தாவா சொத்திற்கான வில்லங்கம் போட்டு வாங்கவில்லை. நான் கிரையம் பெற்ற சர்வே எண்.373 ன் பழைய சர்வே எண்.104 என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற சர்வே எண்.373 பரமன் குடும்பன் என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆவணங்களில் கண்டுள்ள முத்துநாடார் வகையறாக்கள் விருதுநகரை சேர்ந்தவர்கள் என்றால் இருக்கலாம். நான் கிரையம் பெற்ற சொத்து சத்திரெட்டிபட்டி வருவாய் கிராமத்தை சேர்ந்தது என்றால் சரிதான். ம.சா.ஆ.1, 2 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள முத்துநாடார் வகையறாவிற்கு பாத்தியப்பட்டதாக உள்ள ஆவணத்தை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் 2022 ல் தெரிந்து கொண்டேன். ம.சா.ஆ.1, 2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முத்துநாடார் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட மூல ஆவணத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மனு சொத்து ஆதியில் பரமன் குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாக உள்ள நிலையில் வீட்டு வசதி வாரியம் விருதுநகரை சேர்ந்த முத்து நாடார் வகையறாவிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட சட்ட

நடவடிக்கையில் அனைத்தும் சட்ட விரோதமாக உள்ளதால் நான் கிரையம் பெற்ற ஆவணம் உண்மையான உரிமையாளரிமிருந்து கிரையம் பெறவில்லை என்பதால் நான் கிரையம் பெற்ற ம.சா.ஆ.3 ம் சட்டபடியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற சொத்துக்கள் வழக்கின் வாதி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது தெரிந்து நான் அவர்களை நேரில் சென்று சமாதானம் பேசினேன் என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற சொத்து உண்மையான உரிமையாளர்கள் வாதி, பிரதிவாதிகள் என்று தெரிந்தும் முறைகேடாக கையகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து நான் கிரையம் பெற்றது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், நிரூபண வாக்கு மூலத்திலும் பிராதில் 3 ம் அயிட்டத்தில் 1,2 சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ள பிராது விபரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் பார்த்த பிராது சொத்துக்கள் 2012 மற்றும் 2017 ல் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் 2022 ல் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிராது சொத்தின் மீது நீதிமன்ற தீர்ப்புகள் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நான் எனது சொத்தை பொறுத்து தனியாக வழக்கு தாக்கல் செய்து தான் பரிகாரம் கோரமுடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு சொத்தில் எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோராமல் நிறைவேறுதல் நடவடிக்கையிலிருந்து விடுவிக்க கோரி பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையப்பத்திரத்தில் 29.11.2012 ல் ஹவுசிங்போர்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தில் கிரையம் சொத்துக்கள்

யாரிடமிருந்து கிரையம் பெறப்பட்டது என்றோ அல்லது யாரிடமிருந்து கையகப்படுத்தப்பட்டது என்றோ மற்றும் மனுசொத்து சம்மந்தமாக எந்த மூல ஆவணத்தை பற்றியோ குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். மனு சொத்து சம்மந்தமாக நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் ஆணையர் நியமனம் செய்து மனு சொத்தை வருவாய் அலுவலர்கள் மூலம் பார்வையிட்டு அளவீடு செய்யப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் பெற்ற மனு சொத்தின் உண்மையான உரிமையாளர் நிறைவேறுதல் மனுவின் வாதி,பிரதிவாதிகளாக இருக்கும் போது முறையற்ற முறையில் மனு சொத்திற்கு சம்மந்தமில்லாத முத்து நாடார் வகையறாவிடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தியதும் முறையற்ற முறையில் கையகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணமும் சட்டப்படியான ஆவணங்கள் இல்லை என்பதால் நான் கோரி பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக உரிமை பிரச்சனை எழுந்துள்ளதால் விளம்புகை பரிகாரம் கோராமல் நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்மையிலிருந்து விடுவிக்க கோரிய மனு சட்டப்படியான மனு இல்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நிறைவேற்று மனுவின் சொத்துக்களுக்கு சம்மந்தமில்லாதவை என்று சொன்னால் சரியல்ல. எனது மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.